பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
The EELANADU

மலர் 19 கார்த்திகை 18 ஜுமாஹஜ் 21 இதழ் 293
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 3-12-77

லாலா தயாரிப்பு

புதிய முறையில லாலா தயாரிக்கப்பட்டு இலங்கை முழுவதிலும் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது. லாலா நீலசோப்பை வாங்கி உபயோகித்து அதன் தரத்தை தெரிந்து கொள்ளுங்கள்.
லாலா சோப்தொழிற்சாலை
— அச்சுவேலி —

## உள்ளூராட்சி தேர்தல் விரைவில் நடைபெறும்

### பேரவையில் பிரேமா

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் விரைவில் நடைபெறும் என்று உள்ளூராட்சிஅமைச்சர் திரு. ஆர்.பிரேமதாச நேற்று பேரவையில் தெரிவித்தார்.

திரு. பிரேமதாச பேரவையில் சமர்ப்பித்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் விசேட சட்டமூலம் நேற்று பேரவையில் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

இலங்கைப் பிரஜாவுரிமைபெற்ற தோட்டத்தொழிலாளர்கள் எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலேயே முதல்தடவையாகவாக்களிக்க உள்ளனர் என்றும் திரு. பிரேமதாச கூறினர்.

இம்மசோதாமீது இ. தொ. கா. தலைவர் திரு எஸ். தொண்டமான் கொண்டுவந்த திருத்தமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (இ)

# பொத்துவில் எம். பியை பதவிதுறக்க கோரிக்கை!

## கனிஷ்ட பல்கலைக் கழகத் திட்டம்

(கொழும்பு)

கனிஷ்ட பல்கலைக் கழகத் திட்டம் செயற்படுத்தப்படவிருக்கிறது.

இத்திட்டம் 1965 – 70ம் ஆண்டுகளுக்கிடையில் காலஞ்சென்ற முன்னுள் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர் ஏ. ஈரியகொல்லையால் கொண்டுவரப்பட்டிருந்தது. (உ)

## அடிப்படைக் கொள்கையை மீறவில்லை என்கிறர் அவர்

(கொழும்பு)

**தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் வேட்பாளராக நிறுத்தப்படுமுன்னர் எழுத்துமூலம் கொடுத்த வாக்குறுதியின்படி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜினமாச்செய்யும்படி தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர்கள் திரு. அ. அமிர்தலிங்கமும் திரு. மு. சிவசிதம்பரமும் நேற்று பொத்துவில் தொகுதி இரண்டாவது எம். பி. திரு எம். சி கனகரத்தினத்திற்கு அனுப்பிவைத்த கடிதத்தில் கேட்டுள்ளனர்.**

இதேசமயம் பொத்துவில் தொகுதியின் இரண்டாவது எம். பியான திரு. எம். சி. கனகரத்தினம் நேற்று பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையில், தமிழர் விடுதலைக்கூட்டணியின் அடிப்படைக்கொள்கையைத் தாம் எந்தவிதத்திலும் மீறவில்லை என்று தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய திரு. கனகரத்தினம் வரவு-செலவுத்திட்டத்தையும் அரசையும் வெகுவாகப் பாராட்டிப் பேசியதுடன் வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராகத் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்கள் வாக்களித்தபோது திரு கனகரத்தினம் மட்டும் அதற்கு ஆதரவாக வாக்களித்தார். இதைத் தொடர்ந்து திரு. கனகரத்தினத்தின் மீது தமிழர் விடுதலைக் கூட்டணி மேலிடம் உடன் நடவடிக்கை எடுத்துக் கட்சியிலிருந்து அவரைத் தற்காலிகமாக நீக்கியிருந்தது. [இந்தச் செய்தி நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகியிருந்தது தெரிந்ததே.]

கூட்டணியின் செயலதிபர்கள் இருவரும் திரு. எம். சி. கனகரத்தினத்திற்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், "வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் தாங்கள் நிகழ்த்திய உரையும் வாக்களிப்பு நேரத்தில் நடந்துகொண்ட முறையும் அதிர்ச்சி தருவனவாக உள்ளன" என்று குறிப்பிட்டுள்ளனர்.

திரு. கனகரத்தினத்தின் நடத்தை பற்றிக் கூட்டணியின் நடவடிக்கைக் குழு ஆராய்ந்து மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி முடிவுசெய்யுமென்றும் அதுவரை திரு. கனகரத்தினத்தைக் கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைத்திருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமது நடத்தைக்கு உரிய விளக்கமிருந்தால் 2 வாரங்களுக்குள் விளக்கம் தரும்படியும் செயலதிபர்கள் தங்கள் கடிதத்தில் திரு. கனகரத்தினத்தைக் கேட்டுள்ளனர்.

"தேர்தலில் போட்டிக்கு நிற்பதற்கு முன்னர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறமாட்டேனென்றும் ஆட்சிமன்றக் குழுவின் கட்டுப்பாட்டை மீறமாட்டேனென்றும் அப்படி

(6-ம் பக்கம் பார்க்க)

## பேரவையில் சிறிமா விடுத்த அறிக்கை

[கொழும்பு]

தேசிய அரசுப் பேரவையில் காணிவிவசாய அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகா இரண்டு தினங்களுக்கு முன்னர் பேசுகையில் தம்மைப் பற்றிக் குறிப்பிட்ட சில தகவல்கள் தம்மை வேண்டுமென்றே அவமதிப்பதற்காகச் செய்யப்பட்டதென்றும் பொய் [illegible] தெரிவித்ததன் மூலம் சபையையே அவர் அவமதித்துள்ளார் என்றும் இப்படியான செயல்கள் பற்றி விசாரணைசெய்வதற்கு ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமென்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும் அத்தனகலைத் தொகுதியின் உறுப்பினருமான திருமதி சிறிமா பண்டாரநாயகா

[6-ம் பக்கம் பார்க்க]

## "வாயளவில் கூறினல் போதாது, செயல்வேண்டும்"

### பேரவையில் வட்டு எம். பி.

(கொழும்பு)

"'எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று வாயால் கூறினல் மட்டும் போதாது, செயலில் காட்டவேண்டும்" என்று வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "கடந்த 30 வருட காலத்தில் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட கைத்தொழில் நிறுவனங்கள் நாட்டில் நிறுவப்பட்டன. இவற்றில் 200 தான் வடக்கு, கிழக்கில் அமைக்கப்பட்டது.

இதில் 3 பெரும் கைத்தொழில்சாலைகள் அமைக்கப்பட்டபோதிலும் அதுவும் 1948-52க்கிடையில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியாளரினல்தான் நிறுவப்பட்டன. இதன்பின்னர் வடக்கு-கிழக்கில் எந்தவகையான கைத்தொழில்களும் மேற்கொள்ளப்படவில்லை. வடக்குப்பகுதியில் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்று நிறுவ போதிய மூலப்பொருள்கள் இருந்தும் முந்திய அரசாங்கம் கவனிக்கவில்லை."

## "தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்கவேண்டும்"

### யாழ். நகரில் 'வாசு'

(யாழ்ப்பாணம்)

"தமிழ்மக்கள் தமக்கென ஓர் ஆட்சியை அமைக்க தமிழ் ஈழக் கோரிக்கையை முன் வைத்திருக்கிறர்கள். இப்படி அமைப்பது நியாயமல்லவென தொழிலாளர் நலன் கருதியே நான் கூறுகிறேன். ஆதலால் அக்கோரிக்கையை அவர்கள் கைவிடவேண்டும். ஆனல் அதே சமயம் நாம் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த அரசாங்க காரியாலய ஊழியர் சேவைச்சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தில் பேசிய சமசமாஜக்கட்சி இடதுபிரிவு குழுத் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காரா மேற்கண்டவாறு கூறினர்.

திரு. பத்மசிறி திரிமன்ன தலைமையில் நடந்த கூட்டத்தில் நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் சுமார் 2000 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். கூட்ட நிகழ்ச்சிகள் சிங்களத்தில் நடைபெற்றன.

திரு வாசுதேவ நாணயக்காரா மேலும் கூறியதாவது:

தமிழர்களும் ஓர் இனமாக இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்றர்கள் என்பதை நாம் ஏற்று அவர்களின் தனித்துவத்திற்கு மதிப்பளித்து அவர்களின் தாய்மொழியில் நிர்வாகம் நடத்த வசதியளித்து தமிழில் கல்வி பெற வழி வகுத்து அவர்களின் சகல உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடியவகையும் யில் அவர்களின் சுயநிர்ணய உரிமையை நாம் அங்கீகரித்தாக வேண்டும்.

நாட்டில் உழைப்பாளிகள் வருமானக் குறைவினலும் வாழ்க்கைச்செலவு உயர்வினலும் அடைந்துவரும் கஷ்டத்தைப் போக்க வடக்கிலும் தெற்கிலும் வாழும் தொழிலாளிகள் ஐக்கியப்பட்டு போராடுவதன் மூலமே விமோசனம் காணமுடியும்.

இக்கூட்டத்தில் கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலமும் கலந்துகொண்டார். (க)

## யாழ்ப்பாணத்தில் மாவுக்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள களஞ்சியத்திற்கு மாமூடைகள் வருவதில் ஏற்பட்ட தாமதத்தினுல் யாழ்ப்பாணப் பகுதியில் மாவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தனியார் துறைகளில் மட்டுமன்றிப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களிலும் ஒருவருக்கு குறிப்பிட்ட அளவுமா வழங்கப்படுகிறது

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் லொறி மூலம் கொழும்பிலிருந்து மாவு பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இதேசமயம் கப்பல் மூலமாகவோ, ரயில் மூலமாகவே வடபகுதிக்கு மாவைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க- அ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பிரபல பாடசாலைகள், பதி நிலையம் ஆகியவற்றிற்கு அண்மையில், மிட்டாய்கடை சந்திக்கும், ஈழநாடு காரியாலயத்திற்கும் இடையில் மானிப்பாய் வீதி புதுறோட்டில் 8½ பரப்பு காணி வான்பயிர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொழில் ஸ்தானம், கைத்தொழில் நிலையம் அமைக்க ஏற்றஇடம் விபரங்களுக்கு: மு. பாலலிங்கம், தலையாழி, கொக்குவில். 7809

தெல்லிப்பழை கொல்லன் கலட்டியில் அம்பனை - கீரிமலை வீதியில் 10 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல 7811 மே/பா. ஈழநாடு. யாழ்ப்பாணம். 7811

## தேவை

ஆங்கிலம்- தமிழ் கொம்போசிங் செய்யக்கூடிய மெஷின் மைண்டர், Book Binidng முதல் சகல அச்சகவேலைகளும் தெரிந்த ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். வன்னி அச்சகம், கண்டி, வீதி, வவனியா. 7819

உடைகளை பீஸ்லுடன் சரிபார்த்துக் கொடுப்பதற்கும் உடைகளுக்காகபில் எழுதுவதற்கும் லிகிதர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும் சலையிற் றைக்கிளீனேர்ஸ் ராணிசினிமா அருகாமை, யாழ்ப்பாணம். 7822

## தேவை

ஸ்ருடியோவில் திறமையாக வேலைசெய்பவர்களும், பழக விரும்புவோர்களும் நேரில் வரவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். தரன் ஸ்ருடியோ, 9, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 7821

கண்ணடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ளவர்களும், வேலை பழகுபவர்களும் (Trainees) உடனடியாகத் தேவை. வேலை பழகுபவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து நாளொன்றிற்கு ரூபா 6/- வரையில் சம்பளமாகக் கொடுக்கப்படும். நீர்வேலிக்கு கிட்டடியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 7790

## வகுப்புகள்

G.C.E.A/L. ஏப்ரல் 78 வர்த்தக, விஞ்ஞான, கலை துரித மீட்டல் வகுப்புகள் இப்பொழுது நடைபெறுகின்றன. யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி 341, நாவலர் வீதி (கைலாசபிள்ளையார் கோவிலடி) யாழ்ப்பாணம். 7824

**WANTED**

Teacher for double maths, Physics (with Chemistry will be preferred) in Adv, level classes Apply immediately.

Rector, st. Patrick's College, Jaffna
7827

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு/13986

1. தம்பிப்பிள்ளை கந்தசாமியும் பெண்
2, தவமணியும் வைரெழு தெற்கு

வழக்காளி

எதிராக

1. தம்பிப்பிள்ளை அன்னலிங்கமும் பெண்
2. பூமணியும்
3. விஜிசித்தம்பி சுப்பிரமணியமும் பெண்
4. நல்லம்மாவும் இணுவில் கிழக்கு

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் ஈடு 13986ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1977-ம் ஆண்டு மார்கழி மீ 28 உ புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 6316ம் 1973-7-27 தொடக்கம் 1975-5-8 வரைக்கும் ரூபா 4000க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் எதிராளியால் 7-3-77ல் கொடுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று இணுவில் இறை ''முக்குவிச்சியொல்லை'' குளி 9 பிறகும் 'முக்குவிச்சியொல்லை' குளி 9 பிறகும் 'முக்குவிச்சியொல்லை' குளி 9 பாகங்களுக்கு மொன்றுய்க்கூடிய நிலபர. 1⅓ மேற்கேயிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காற்பாவிப்புரித்தும் தெற்கொழுங்கையிலிருந்து இக்காணிக்குவரும் நாலு முழஅகலப் பாதை பாவிப்புரித்தும், கல்வீடும் இந்தப் பரப்பு 1⅓க்கும் எல்லை கிழக்கு கந்தர் வேதவனம் பெண் செல்லாச்சியினுதனம் வடக்கு வேதவனம் முருகேசுவுக்கும் பங்காளருக்கு முரியவாதனம், மேற்கு கந்தையா கைம்பெண் இரத்தினத்தினுதனம் தெற்கு 4 முழ அகல கையொழுங்கை இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

எஸ். சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

'வேல்பதி'
புத்தூர்
20-11-77
7813

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் வரவு செலவுத் திட்டம்-1978

1978ம் ஆண்டிற்குக் கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத்திட்டம் 1977ம் ஆண்டு மார்கழி மாதம் 5ம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென, மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) 212(பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

க. சிவஞானம்
விசேட ஆணையாளர்
யாழ்.மாநகராட்சிமன்றம்

மாநகராட்சிமன்ற அலுவலகம்
யாழ்ப்பாணம்.
21.11.78. 7823

முகம்கழுவுதற்கு

## கேணியில் இறங்கியவர் கேணிக்கே பலி!

(யாழ்ப்பாணம்)

முகம்கழுவக் கேணியில் இறங்கிய இளைஞர் ஒருவர் கேணிக்குப் பலியானார்.

கந்தர்மடத்தைச் சேர்ந்த 20வயதான சி. செல்வநாயகத்தின் மரண விசாரணையில் இவ்விபரம் தெரியவந்தது. யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினார்.

பிறவுண் றோட்டில், தம்பி குணபாலசிங்கத்துடன் சென்றவர், அங்குள்ள கேணியில் இறங்கி முகம்கழுவும்போது தவறிவிழுந்து சேற்றில் புதைந்ததாகவும், தம்பியார் குளறியதைத் தொடர்ந்து அயலவர்கள் வந்து அவரை வெளியில் எடுத்தபின் மரணமானாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது. விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

(க-அ)

## பிஸ்கால் விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்,
காசிப்பிள்ளை கணேசன்,
தேவாலய வீதி, யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழக்கு இலக்கம்:
காசு. சு. 4306.

எதிராக

தியோகுப்பிள்ளை பத்திநாதன், மூன்றும்குறுக்குத்தெரு நாவாந்துறை, தற்பொழுது வாடிவீடு, மூன்தெரு, யாழ்ப்பாணம்.

எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளியிடமிருந்து வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப்பணம் ரூபா 1165/-க்கு ரூபா 1398/-க்கு 4-12-69 தொடக்கம் 3-3-70 வரையும் 12% வட்டியும் அதன்பின் முழுத் தொகையும் கொடுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 355-85 சதமும் இதில் ரூபா 200/- தீர்வைத் தொகையில் இருந்து 7-7-76 ல் கழித்து 17-11-76 ல் நடைபெறவிருந்த பிஸ்கால் விற்பனைச் செலவும் சேர்த்தும் பிஸ்கால் செலவும் பவுண்டேச்சும் அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1977 ம் ஆண்டு மார்கழி மாதம் 27 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம், டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை மேற்கிறை ''பறையடிவடிக்கறை'' நிலப்பரப்பு 5 ம் குழி 8½ யும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ. லாசறஸ் அவர்களால் 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 30 ம் திகதி 2762 ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் வீ என்று குறிப்பிட்ட ஆதனம். இதில் எல்லைகள்: கிழக்கு எஸ். ஞானப்பிரகாசத்திற்கும், எம். இன்னாசமுத்துக்குரியாதனம். வடக்கு நீக்கிலாப்பிள்ளை ஆசீர்வாதத்திற்கும் பெண் மாகிறேற்றுக்கும் உரியாதனம். மேற்கு றோட்டு, தெற்கு கே. வைத்திலிங்கத்திற்கும் மறுபேர்களுக்குமுரியாதனம். இதில் பிரிக்கப்படாத ½ பங்கு.

மூ. பத்மநாதன்
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
28-11-77. 7825

# யாழ். மாநகராட்சி மன்றம்
# கேள்வி அறிவித்தல் (மீள அழைத்தல்)
## துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம், சந்தைகள், கடை அறைகள் ஆகியவற்றிற்கான 1978ஆம் ஆண்டுக்கான குத்தகை

1-1-1978ஆம் திகதி தொடக்கம் 31-12-1978ஆம் திகதி வரையிலான காலத்திற்கு கீழ்க்காணும் சந்தைகள், கடை அறைகள் ஆகியவற்றிற்கான குத்தகைக் கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 14-12-77ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாழ். மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் இருந்து பெறக்கூடிய மாதிரிப் படிவங்களில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரை இடப்பட்டனவாகவும் இருத்தல்வேண்டும். கேள்விகள், இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல்வேண்டும். அல்லது மாநகராட்சிமன்ற ஆணையாளர் அலுவலகத்தில் இருக்கும் ''கேள்விப்பத்திரப் பெட்டியினுள்'' சேர்க்கப்படல்வேண்டும். எந்தக்குத்தகைக்கு கேள்வி சமர்ப்பிக்கப்படுகின்றதோ அக்குத்தகையின் பெயரைக் கேள்விப்பத்திர உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

2. கீழே விபரிக்கப்பட்ட அட்டவணையின்படி 13-12-1977ஆம் திகதி செவ்வாய்கிழமை பிற்பகல் 8.00 மணிவரையும் அதற்குரிய கீழ்க்கண்ட பணத்தைச் செலுத்தியதன் பெயரில் கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

3. கேள்வித் தொகைகள் இவ்வருடத்தின் (1977) இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகைக்கு குறையாததாக இருத்தல் வேண்டும்.

| குத்தகை விபரம் | 1977 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்விப் பிணைக் கட்டணம் | நொத்தாரிஸ் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. செங்குந்தா சந்தை | 43,300.00 | 10.00 | 250.00 | 750.00 |
| 2. பண்ணை மீன் சந்தை | 9,555.00 | 10.00 | 50.00 | 50.00 |
| 3. செங்குந்தா துவிச் சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 860.00 | 10.00 | 50.00 | 50 00 |
| 4. சின்னக்கடை சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 1,200.00 | 10.00 | 50.00 | 50.00 |
| 5. பண்ணை மீன்சந்தை கடை அறை | 528.88 | 10.00 | 50.00 | 50.00 |
| 6. பொதுசன நூல்நிலைய துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 2,107.00 | 10.00 | 50.00 | 50.00 |

இது விடயமாக இதர விபரங்களைப் பெற விரும்புவோர் அவற்றை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம் 30-11-1977
7817

கெய்ரோ

# பேச்சுவார்த்தைகளில் நாம் கலந்து கொள்ளாதது ஏன்?

## விடுதலை இயக்கப் பிரதிநிதி விளக்கம்

[பெய்ருட், டிச 2]

'கெய்ரோவில் இஸ்ரேலியத் தலைவர்களுடன் தாம் நடாத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்ளுமாறு எமக்கு விடுத்துள்ள அழைப்பினை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம்' என பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் உத்தியோகபூர்வ பிரதிநிதி எம். லாபதி இங்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

'கெய்ரோ பேச்சுவார்த்தைகள் எகிப்திய-இஸ்ரேலிய இருதரப்பு பேச்சுவார்த்தைகளாகவே இறுதியில் நடந்து முடியும் என்பதை நாம் அறிவோம். ஜனாதிபதி சதாத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டு திரிபோலியில் நடைபெறவுள்ள உச்சி மகாட்டுக்கு எமது பிரதிநிதிகளை அனுப்ப பாலஸ்தீன விடுதலை இயக்கம் தீர்மானித்துள்ளது' என லபாதி தமது அறிக்கையில் மேலும் கூறியுள்ளார். (உ)

# சதாத்தின் தந்திரமுயற்சி: சிரியா சீற்றம்

(டமாஸ்கஸ், டிச 2)

'இஸ்ரேலியத் தலைவர்களுடன் கெய்ரோவில் அன்வர் ஸதாத் நடாத்தவுள்ள பேச்சுவார்த்தைகளில் சிரியா கலந்து கொள்ளாது. எகிப்தில் உக்கிரமாகி வரும் நெருக்கடிகளை மூடிமறைப்பதற்காக ஜனாதிபதி ஸதாத் இவ்வாறான பயனற்ற தந்திரங்களில் இறங்கியுள்ளார் என சிரியா கருதுகின்றது. உள்நாட்டில் தமக்குச் சாதகமாக பிரசாரத்தைத் தீவிரப்படுத்துவதே ஸதாத்தின் நோக்கமாகும் என சிரியா வெளிநாட்டமைச்சர் ஏ. கதாம் அறிவித்துள்ளார்.

இங்கு நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசுகையில் சிரியாப் பிரதமர் ஏ. கலேஃபாலி கூறியதாவது:

"மத்திய கிழக்கு நெருக்கடிக்குத் தீர்வு காணுவது பற்றி சிரியா இடைவிடாது இதர அரபு நாடுகளுடன் ஆலோசனை நடாத்தி வருகின்றது. ஆனால் எகிப்து மட்டும் இதில் விதிவிலக்காக உள்ளது.' (உ)

# கெய்ரோ மாநாட்டில் கலந்து கொள்ள

## மோஷே தயான் சொல்கிறார்

டெல் அவிவ், டிச.2

''கெய்ரோவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேல் கலந்து கொள்ள தயாராக இருக்கிறது. ஆனால் 1967ல் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலிய துருப்புக்களை வாபஸ் பெற நாம் தயாரில்லை'' என இங்கு நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசுகையில் இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் மோஷே தயான் கூறினார்.

''குறிப்பாக ஜோர்தான் நதியின் மேற்குப் பிரதேசம் பற்றிய எமது நிலைபாட்டினை எகிப்து நன்கு அறிந்துகொண்டுள்ளது. இந்த நிலையில் தான் எமக்கு அழைப்பும் விடுத்துள்ளது. கைப்பற்றப்பட்ட பிராந்தியங்கள் பாலஸ்தீன ராஜ்யம் ஆகியன தொடர்பான எமது அடிப்படையிலான நிலைபாட்டினை மாற்றிக் கொள்ள எம்மால் முடியாது.'' என தயான் ஆணித்தரமாக குறிப்பிட்டார். (உ)

# மாநாடு வெற்றி பற்றி கார்ட்டரின் நிலை என்ன?

## நியூயோர்க் டைம்ஸ் கருத்து

நியூயோர்க், டிச.2

''ஜனாதிபதி சதாத்தினது முன்முயற்சியின் பேரில் கெய்ரோவில் அரபுத் தலைவர்களுக்கும் இஸ்ரேலியத் தலைவர்களுக்குமிடையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளின் வெற்றி குறித்து ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தயக்கமும் மயக்கமும் கொண்டுள்ளார். இதன்காரணமாக, ஜெனிவா மகாநாட்டினைக் கூட்டுவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதற்கு கெய்ரோ பேச்சுவார்த்தைகள் வழிவகுக்குமா என்பது பற்றி கார்ட்டர் நிர்வாகம் சற்று ஐயப்பாடு கொண்டுள்ளது என்று வெள்ளை மாளிகை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்'' என நியூயோர்க் டைம்ஸ் எழுதியுள்ளது.

''மத்திய கிழக்கு நெருக்கடியில் மத்தியஸ்தம் வகிக்கும் நாடு என்ற வகையில் மத்திய கிழக்குத் தகராற்றில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புகளினதும் கோரிக்கைகளையும் கருத்திற் கொள்ள வேண்டிய கடமை அமெரிக்காவைச் சார்ந்திருப்பதனாலேயே, கெய்ரோ பேச்சுவார்த்தைகள் பற்றி கார்ட்டர் நிர்வாகம் சற்று ஜாக்கிரதையாக உள்ளது'' என நியூயோர்க் டைம்ஸ் மேலும் கருத்து வெளியிட்டுள்ளது. (உ)

# மீன் இயல் ஆய்வு

கேர்ச், டிச 2

இலங்கையும், சோவியத் யூனியனையுஞ் சார்ந்த மீன் இயல்துறை நிபுணர்கள் இலங்கையின் கடற்பிராந்தியத்திலும், இந்து சமுத்திரத்தின் சில பகுதிகளிலும் மீன் இயல் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர்.

சோவியத் ஆய்வுக் கப்பலான 'ஸ்வேய்தா கிரிமா'வின் துணைகொண்டு இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீன் வகைகள் பற்றியும், மீன் வகைகளின் இருப்பு பற்றியும், பல்வேறு ஆழ மட்டங்களில் மீன்களைப் பிடிக்கும் நுணுக்க முறைகள் பற்றியும் புதிய விவரங்கள் பலவற்றை இலங்கை சோவியத் நிபுணர்கள் கூட்டாகச் சேகரித்துள்ளனர்.

மீன்பிடி நிலையங்களை நிறுவுவதிலும், மீன் பதனிடற் தொழிலகங்களை நிர்மாணிப்பதிலும், மீன்பிடித்துறை நிபுணர்களுக்குப் பயிற்சியளிப்பதிலும் இலங்கைக்கு சோவியத் யூனியன் உதவி வழங்கி வருகின்றது. (உ)

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை, மாவிட்டபுரம் ஊடாக நடைபெறும் 769ம் பாதை இலக்க இ. போ. ச. பஸ் சேவை சமீப காலமாக மிக மோசமான நிலையில் உள்ளது என்று பெரும் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பளைவரை இந்த

# வாய்க்காலைச் சீர்படுத்தக் கோரிக்கை

(சங்கானை)

வடபகுதியில் ஏற்படும் மழை வெள்ளம் பல கிராமங்களிலிருந்து வந்து ஒருமித்து அராலிக்கடலைவடையும் 'அந்திரான்' வாய்க்கால் வருடா வருடம் வெள்ளத்தால் சேதப்படுவதால் பல நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டு விவசாயிகள் பெருநஷ்டம் அடைகின்றனராம். இதனை உடனடியாகச் சீர்படுத்தவேண்டும் என்ற தீர்மானமொன்று சங்கானை உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற உணவுஉற்பத்திக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு நீர்பாசன பகுதியினருக்கு பிரதி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ)

769-ம் இலக்க

# யாழ்—கீரிமலை பஸ்சேவை படு மோசம்

இலக்க பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இதேவேளை தெல்லிப்பளை வரை 764 பாதை இலக்க பஸ் சேவையும் வசாவிளான் ஊடாக நடைபெறுகின்றது.

தெல்லிப்பளை ஊடாகவே 795 பாதை இலக்க கீரிமலை பஸ்சேவையும் நடைபெறுகின்றது. இப்பஸ் தெல்லிப்பளை, கருகம்பானை ஊடாக கீரிமலை செல்கிறது.

ஆக, மாவிட்டபுரத்திற்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் உள்ள பிரயாணிகள் தாம் மேற்படி பஸ் சேவை சீர்கேட்டால் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

உதாரணமாக கடந்த வெள்ளிக்கிழமை காலை 6-40க்குப் பின் பஸ்சேவை மாவிட்டபுரம் ஊடாக நடைபெறும் பஸ்

(5-ம் பக்கம் பார்க்க)


# மல்லாகம் நீதிபதியைக் கௌரவித்து பிரியாவிடை

(யாழ்ப்பாணம்)

ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாக இடமாற்றலாகிச் செல்லும் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எம். டி. ஜேசுரட்ணத்திற்கு மல்லாகம் நீதிமன்றப் பிரிவிலுள்ள பல பொதுஸ்தாபனங்கள் ஒருங்கிணைந்து பெரும் பிரியாவிடை வைபவம் ஒன்றினை நடாத்தவுள்ளன.

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக அவர் ஆற்றிய நீதிவழுவா அரும்பணியைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் இவ்வைபவம், பல்வேறு நிகழ்ச்சிகளைக் கொண்டதாக அமையும் என்று வைபவ அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனவரி முதல் வாரத்தில் இவ்வைபவம் சுன்னாகத்தில் நடைபெறும். (உ)



பாதுகாப்பு, நம்பிக்கை, சௌகரீகம்

இத் தனிச் சிறப்புக்கள், இலங்கை அடங்கிலுமுள்ள, முதலீடு செய்வோர்களிடையே பொது வழக்குச் சொற்களாகி, ஹவுஸ் அன்ட் புரொப்பெர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்டின் முதலீட்டு திட்டங்களுக்கு சிறந்த மவுசை ஏற்படுத்தியுள்ளன.

நீங்கள் முதலீடு செய்யும்போது உங்கள் பணத்திற்கு சம்பூரணமான முதலீட்டு பாதுகாப்பு அளிக்கப்படுகிறதா என்பதையும் அவ்வாறனமுதலீடு சராசரி வருமானத்திற்கு மேற்பட்ட வருமானத்தையும் உத்தரவாதங்களையும், தனிப்பட்ட விசேஷ சேவை வசதியையும் அளிக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். இவ் வசதிகளை எம்மிடம் முதலீடு செய்வோர் சுமார் இருபது ஆண்டுகளாக பெற்று இன்புற்றுவருகின்றீர்கள்.

முதலீட்டுத் திட்டங்கள்

| குறுகிய காலம் | நீண்ட காலம் | கால வைப்புகள் |
|---|---|---|
| 12% | 16½% | 18% |
| "முதலீட்டு சான்றிதழ்" வட்டியுடன் முதலீடு செய்த பணத்தை வட்டியுடன் இலகுவில் மீட்டுக்கொள்ளலாம். | 1 வருடம் - 14 1/2% வருடமொன்றுக்கு; 2 வருடம் - 15% வருடமொன்றுக்கு; 3 வருடம் 15 1/2% வருடமொன்றுக்கு; 4 வருடம் - 16% வருடமொன்றுக்கு; 5 வருடம் - 16 1/2% வருடமொன்றுக்கு; முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக் கொள்ளலாம். | 6 மாதங்கள் - 12% வருடமொன்றுக்கு; 12 மாதங்கள் - 15% வருடமொன்றுக்கு; 18 மாதங்கள் - 18% வருடமொன்றுக்கு; முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக் கொள்ளலாம். |
| மாதாந்த வட்டி | மாதாந்த வட்டி | முதிர்ச்சியின் பேரில் வட்டி |

ஹவுஸ் அன்ட் புரொப்பெர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்,
யாழ்ப்பாணக் கிளை
2—3, நவீன சந்தை பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7698. யாழ்ப்பாணம்.
கொழும்புக்கிளை: HPT கட்டிடம், கொழும்பு-8

இன்று நாவலர் பெருமான் குருபூசை

# நாவலரைப்போல் நமக்கு ஆளில்லை

ஈழத்துச் சைவச் சான்றோர்கள் வரிசையில் நாவலர் பெருமான் ஒருதனியிடம் பெற்றவர். அவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழமணித் திருநாட்டில் சைவத்தையும் தமிழையும் தமதிரு கண்களாகக் கொண்டு பணிபுரிந்த திருத்தொண்டர். 'சந்தனக்கட்டை போலத் தான் தேய்ந்தும் பிறருக்கு மணம் வீசிப்பயன் தருபவனே நற்றொண்டன்' என்று சான்றோர் ஒருவர் கூறிய வாக்குக்கு இலக்கியமாக விளங்கியவர் நாவலர் பெருமான். நல்லூர் நகரில் உதித்த நாவலர் பெருமான், இவ்வுலகில் ஐம்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்தவர். அவருடைய வாழ்வின் முற்பகுதி கல்வி கற்பதிற் கழிந்தது. இடைப்பகுதியில் தமிழகத்தின் தொடர்பு இறுகிநின்றது. கல்வித்திறத்திலும் வாக்குவன்மையிலும் தமிழ்நாட்டு அறிஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர் நாவலர். 'ஒழுக்கத்தின் ஒல்கா உரவோராக' அவர் விளங்கியமையால் சென்னை முதல் கன்னியா குமரிவரை அவர்புகழ்பரவியது. தொண்டு புரியும் தூயபிரமசாரியாக நாடுபோற்ற விளங்கிய நாவலர் "காமங் கடிந்த காட்சியர்" என்று புகழப்பெற்றார். தெய்வம் அவருக்கு உறுதுணையாக நின்றது. "எடுத்தகாரியம் யாவினும் வெற்றி" ஈட்டினார் நாவலர்.

நாவலருடைய வாழ்வின் இறுதிப்பகுதி, இலங்கையில் சைவசமயமும் செந்தமிழ் மொழியும் சிறக்கவும் செழிக்கவும் பணிபுரிவதிலேயே கழிந்தது. நாவலர் ஒரு கருமயோகி- 'பணிபுரிவதே பகவானைத் தொழுதல்' என்னும் அளவுக்கு அவர் திருத்தொண்டு இணையற்று இலங்கியது. முப்போதும் கைப்போது மலர் தூவிக் காதலுடன் கடவுளை வணங்கும் நியமம் பூண்டவர் நாவலர். பத்தியும் சித்த சுத்தியும் இறைபணியும் பொதுப் பணியும் நிறைந்த நாவலர் வாழ்வு ஒரு நிறைவுடைய தெய்வீக வாழ்வு. நூல்களைப் படித்தும், ஆராய்ந்தும் உரை எழுதியும், புதியவசன நூல்களை வடித்தும், கவிதைகள் யாத்தும், நூல்களைப் பிழையின்றி அச்சிட்டும், மாணவர் உள்ளங்கொளக் கற்பித்தும் வாழ்வைக்கழித்த நாவலர் சொற்பொழிவுக்கலைக்குப் புத்துயிர் வழங்கியவர். 'கேட்டார்ப்பிணிக்குந்' தகுதி வாய்ந்த சொற்களைக்கொண்டு சொன்மாரி பெய்து கற்றோரையும் மற்றோரையும் கவர்ந்து நின்றவர் நாவலர். 'நாவலர் தமிழ் நற்றமிழ்' 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்று அவரை அறிஞர் போற்றினர். கல்லூரிகளை அமைத்துநல்லாசிரியரை அமர்த்திக்கல்வியை வளர்க்க நாவலர் கண்ட கனவின் ஒருபகுதி அவர் வாழ்நாளிலேயே நனவாயிற்று. அவருடைய கனவின் எஞ்சிய பகுதியை நனவாக்க சைவபரிபாலனசபை, சைவ வித்தியா விருத்திச்சங்கம் முதலியன முன்னின்று உழைத்தன. யாழ்நகரெங்கும் கல்லூரிகள் எழுந்தன. திரும்பின திசைகள் தோறும் கல்லூரிகள் தோன்றின. கல்வியின் தரம் உயர்ந்தது. ஆனால் சைவத்தின் நிலை உயர்ந்துள்ளதா? என்னும் வினாவுக்கு இன்றைய சைவஉலகம் என்னபதில் கூறும்? ஆலயங்கள் மட்டும் எழுந்துநின்றால் சைவம் வாழ்ந்துவிடுமா? 'நன்மை பெருகு அருள்நெறி' ஆகிய சைவம் வெறும் பேச்சுச் சைவமாக நிற்கின்றது! பணிபுரியும் நெறியாகப் பொலிவுபெறவில்லையே! சிற்றூர்களிலும், பேரூர்களிலும், சேரிகளிலும், நகரிகளிலும் சைவம் எந்நிலையில் உள்ளதென்று சிந்திக்க வேண்டும்.

## மறந்துவிட்டோம்

நாம் இன்று நாவலரை மறந்துவிட்டோம். அவர் 'பாரம் ஈசன் பணியும் அவனுக்கே' என்று தன்னை முற்றும் அர்ப்பணித்தவர்.

அவரைப்போன்று 'தன்கடன் அடியேனையுந் தாங்குதல், என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற இலட்சியத்துடன் இயங்குவாருமில்லை, இயக்குவாருமில்லை! சைவம் வெறும் ஏட்டுச் சைவமாக நிற்கின்றது! கோவில்கள் கோலாகலமான திருவிழாக்காட்சிகளுடன் நிற்கின்றன. தூயபத்தியையும், தன்னலமற்ற பணியையும் சைவ உலகும் மறந்து வருகின்றதே! மந்திரங்களை உரக்கக்கூவுதலினாலோ, பண்களைக் களிவுடன் பாடிவிடுவதனாலோ சைவம் வளர்ந்துவிடுமா? இவற்றுடன் சைவத் திருப்பணி முடிந்துவிட்டதா? நாட்டில் சைவமதபீடம்ஒன்று உருவாகவேண்டும். 'சீலமும் நோன்பும் செறிவும் அறிவும்' நிறைந்த தலைவர்கள் சைவ மதபீடத்தலைவராக விளங்க வேண்டும். 'பூணூல் அணிந்தவரெல்லாம் பூசகர்' என்ற நிலைமாறவேண்டும். அருச்சகர்கள் செந்தண்மை பூண்ட அந்தணர்களாக விளங்கவேண்டும். இவற்றையெல்லாம் முன்னின்று நடத்த நம்மிடை முதியபெரிய சீரிய ஞானச் செல்வர்கள் இல்லையே! அன்று நாவலர் பெருமான், ஆசிரியர்களுக்கும், அந்தணர்களுக்கும், சிற்றரசர்களுக்கும் நாடாளும் நம்பியருக்கும் நல்லுபதேசம் புரிந்து வழிகாட்டினார். செந்தமிழும், ஆரியமும், ஆங்கிலமும் சிறப்புடன் கற்ற செழுமையும், ஒழுக்கசீலமும், தெய்வபத்தியும், திருத்தொண்டும் அஞ்சாநெஞ்சமும் நாவலரைச் சைவ நெறித்தலைவராக விளக்கிநின்றன. இன்றோ, நாவலரைப்போல் கல்வியும் ஒழுக்கமும் கைவந்த கண்ணியவான் நம்மிடை இல்லை! என் செய்வோம்- தெய்வந்தான் திசைகாட்டவேண்டும். மேன்மைகொள் சைவநீதியுலகெலாம் விளங்கவைக்க

''நாவலரைப்போல் நமக்கு ஆள்வேண்டும்.''

வித்துவான் சி. ஆறுமுகம்

---

★ மணியனுடன் ஒரு சந்திப்பு

# தமிழ்நாட்டில் ஊழலற்ற நல்லாட்சி நடக்கிறது

**தமிழ் நாட்டில் நல்லாட்சிநடக்கிறது என்று தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் மணியன் 'ஈழநாடு' க்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியில் தெரிவித்தார்.**

''ஆனந்தவிகட''வின் முன்னாள் பிரதம ஆசிரியரான திரு. மணியன், நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். தமது புதிய சஞ்சிகை சம்பந்தமாக வந்திருந்த அவர், நேற்றுக் காலையிலேயே கொழும்பு திரும்பிவிட்டார்.

## வெளியேற்றப் பட்டீர்களா?

''ஆனந்த விகடனில் சிறப்பாகப் பணியாற்றிய நீங்கள், திடீரெனப் புதிய பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க எண்ணம் கொண்டதன் நோக்கம் என்ன! ஆனந்தவிகடனிலிருந்து நீங்கள் வெளியேற்றப்பட்டதாகக் கூறப்படுகிறதே உண்மையா?'' என்று கேட்டேன்.

''புதிய சஞ்சிகையொன்றை ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணம் உடனடியாக எனக்கு ஏற்பட்டதல்ல. இரண்டு, மூன்று ஆண்டுகளாகவே இதுபற்றிச் சிந்தித்துவந்திருக்கின்றேன். அதற்கான நேரம் அண்மையில்தான் வந்தது. அடுத்த விஷயம்; ''ஆனந்தவிகட''னிலிருந்து வெளியேற்றப்பட்டீர்களா என்று கேட்கிறீர்கள், இல்லை! எனது சுயமுயற்சிக்கு பேராதரவு தந்து, நல்லாசி கூறி, என்னைப் பாராட்டியுள்ளார் ஆனந்தவிகடன் முதலாளி. அவரது பூரண விருப்பத்துடன், எந்தவிதமான கசப்புணர்ச்சியும் இல்லாமல், நான் சந்தோஷமாக "ஆனந்தவிகட"னிலிருந்து வெளியேறி புதிய சஞ்சிகையை ஆரம்பிக்கின்றேன். வெளியேற்றம் என்ற பேச்சுக்கோ அல்லது மனக்கசப்புடன் நான் வெளியேறினேன் என்ற பேச்சுக்கோ சற்றும் இடமில்லை''- இப்படி ஆணித்தரமாகக் கூறினார் மணியன்.

## அனுமதி மறுப்பு

''ஆனந்தவிகடனில் தாங்கள் பணியாற்றிய காலத்தில், உலகில் பல பகுதிகளுக்கும் சென்றிருக்கின்றீர்கள். பயனுள்ள பல பிரயாணக் கட்டுரைகளை எழுதியிருக்கின்றீர்கள். ஏன் நீங்கள் இலங்கை வரவில்லை? பிரயாணக் கட்டுரை எழுதவில்லை? இந்தியாவின் ஒரு அண்டைநாடாக இலங்கை இருந்தும், நீங்கள் இங்கு வராதது பெரும் குறையாக- ஒரு புறக்கணிப்பாகப் படவில்லையா?'' என்று நான் கேட்டதற்கு, மணியன் ''தவறு என்பதை ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இதனைப் புறக்கணிப்பு என்று கூறமுடியாது'' என்று ஆரம்பித்து இப்படிக் கூறினார்!

கே.ஜி. மகாதேவா

''நான் இலங்கைக்கு வருவது இது இரண்டாவது தடவை ஆனால் இடைக்காலப் பகுதியில் என்ன நடந்தது என்பதை நீங்கள் தெரியவேண்டாமா? கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இலங்கைவர பலதடவைகள் நான் முயற்சி செய்தேன். எனது பிரயாணத்தின் உண்மையான நோக்கத்தைத் தெளிவாக எழுதி முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் அனுமதி கோரினேன். பின்னர் சில தடவைகள் ஞாபகப் படுத்தி நீண்டகடிதம் எழுதியிருந்தேன். எனது முயற்சிகள் எல்லாமே தோல்வி கண்டன. எனக்கு சிறிமா அரசாங்கம் அனுமதி வழங்க மறுத்துவிட்டது. இதனால் தான் நான் இலங்கை வரவில்லை. பிரயாணக் கட்டுரையும் எழுதவில்லை. இதுதான் உண்மை''

## 'இதயம் பேசுகிறது'

''உங்களின் புதிய சஞ்சிகை 'ஆனந்த விகடன்' மாதிரித்தான் இருக்குமா?''

''அளவு அதே மாதிரித்தான். ஆனால் அம்சங்களும் பக்கங்களும் அதிகமாக இருக்கும்! பெண்களுக்கென்று தனிப் பகுதி, மூரண்பட்ட கருத்துக்களைக் கொண்ட திரை உலகக் கட்டுரைகள், புதியபாணியில், பல வண்ணப்படங்களைக் கொண்ட பிரயாணக் கட்டுரைகள் ஆகியவற்றுடன் முதல் தரமான பல கட்டுரைகள், கதைகள், நாவல் வெளிவரும்' இப்படிக் கூறிவிட்டு;

''சஞ்சிகை ஒரு வார ஏடு. பெயர் 'இதயம் பேசுகிறது". முதல் இதழிலேயே இலங்கை பற்றிய அழகான கட்டுரை, பல வண்ணப் படங்களுடன் வெளிவருகிறது. ஈழத்தமிழர்களின் பிரச்னைகள் இதில் எதிரொலிக்கும்'' என்றார் மணியன்.

## தமிழக அரசியல்

''தமிழ் நாட்டு அரசியல் எப்படி இருக்கிறது?''

''சிறப்பாக இருக்கிறது! தமிழகத்தில் நல்லாட்சி நடக்கிறது. எம். ஜி. ஆர். ஆட்சியை தமிழ் நாட்டு மக்கள் பாராட்டுகின்றார்கள். ஊழலற்ற, நேர்மையான ஆட்சி நடப்பதாக மக்கள் கூறிக் கொள்கின்றார்கள்'' என்றார் மணியன்.

''சட்டசபைத் தேர்தலில், சென்னை நகரில் கலைஞர் கருணாநிதி (தி. மு. க.) அமோக

(5-ம்பக்கம்பார்க்க)

---

# பண்ணை முகாம் மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பண்ணை மாணவர் தர்ம இல்லத்தில் இயங்கிவந்த அகதிகள் முகாம் நேற்று மூடப்பட்டது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னரே இம்முகாமை மூடிவிட அரசு உத்தரவிட்டிருந்த போதிலும் அகதிகள் வெளியேறாமல் அங்கேயே இருந்ததால் முகாம் தொடர்ந்து இயங்கிவந்தது.

தற்போது இம்முகாமிலிருந்த அகதிகளில் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள் சிலருக்கு அரசு காணி வழங்கிக் குடியேற்றமுகமாகக் கைதடி முகாமுக்கு மாற்றியதைத் தொடர்ந்தும் எஞ்சியிருந்த ஏனையோருக்கு தனியார் ஒருவர் தமது காணிகளை வழங்கிக் குடியேற்றியதைத் தொடர்ந்தும் இம்முகாமிலிருந்த அகதிகள் அனைவருமே வெளியேறியதைத் தொடர்ந்து முகாம் நேற்று அதிகாலையுடன் மூடப்பட்டது.

இவ்வகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதில் அதிக பங்குகொண்ட யாழ். சமூக சேவை ஆணையாளர் திரு. கங்காதரனுக்கு மாணவர் தர்ம இல்லப் பொறுப்பாளர் சகோதரர் யோ. நா. பாலகிருஷ்ணன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். இன்னும் அகதிகள் புனர்வாழ்வுச் சபையும், டொலர் கார்ப்பரேஷன் அதிபரும் இவ்விஷயத்தில் பெரிதும் ஊக்கமும் உதவியும் அளித்ததாக சகோதரர் பாலக்கிருஷ்ணன் தெரிவித்தார்.

அரசாங்கம் குடியமர்த்தியவர்கள் தவிர்ந்த ஏனைய அகதிகளுக்கு டொலர் கார்ப்பரேஷன் அதிபர் நெடுங்கேணியில் உள்ள தமது அபிவிருத்தி செய்யப்பட்ட காணியைப் பகிர்ந்து வழங்கியதுடன் உதவிப்பணமும் மற்றும் சகல வசதிகளும் அளித்துள்ளதாக புனர்வாழ்வுச் சபைச் செயலாளர் திரு. கே. நடராஜா தெரிவித்தார்.

பண்ணை முகாம் அகதிகள் புனர்வாழ்வு பெறுவதற்கு ஒத்துழைப்பும் உதவியும் நல்கிய அனைவருக்கும் மாணவர் தர்ம இல்லப் பொறுப்பாளர் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். (அ)

---

வட இலங்கை
விவசாயிகட்கோர்நற்செய்தி
★செத்தல் மிளகாய் ★ வெங்காயம்
★ உருளைக்கிழங்கு ★ கடலை
★ பயறு வகை
போன்ற உங்களின்
உற்பத்திப்பொருட்களைக்கொழும்பில்
கூடிய விலையில்
விற்றுக்கொடுப்பதற்கு
தொடர்புகொள்ள வேண்டியவர்கள்:
அரசன் கொம்பனி
72 ஏ, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு- 11. தொலைபேசி: 29407

Regal (Jaffna)
Daily at 4-15 7-00 & 9-30 P. M. only
Sat, Sundays 10-30, A.M. 1-30 4-15 7-00 & 9-30P.m.
MAXIMILIAN SCHELL...DIANE BAKER
in
"Karakatoa East of Java"
Cinerama wide screen 70 m. m. [Techni color]

கடை 2 தினங்கள்
ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சத்தி
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் — ஜெயலலிதா (இருவேடங்கள்)
வந்தாளே மகராசி
(புத்தம் புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

9-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ஜெமினி, ஜெயசித்திரா
நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ (யாழ். நகர்) போன்: 7693
எம். ஜி. ஆர். — லதா நடித்த
நீதிக்கு தலைவணங்கு

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஒய். விஜயா ★ அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
மூன்று முடிச்சு
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.

## தமிழ்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வெற்றி பெற்றிருக்கின்றாரே. ஊழல் ஊழல் என்று பலகுற்றச் சாட்டுகள் அமத்தப்பட்டும், லோகசபைத் தேர்தலில் தூக்கி எறியப்பட்டும், படித்தவர்கள் மத்தியில் - சென்னை நகரில் - தலைதூக்கி விட்டார்களே'' என்றேன் நான்.

'படித்தவர்கள் என்றால் சென்னை நகரத்தையும், கல்வி அறிவற்ற வெறும் ரசிகர்கள் என்று மற்றைய பகுதி வாழ் மக்களையும் மதிப்பீடுவது பிழையானது. படித்தவர்கள் சென்னை நகரில் மட்டுமல்ல, திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களிலும் இருக்கிறார்கள்' என்றார் மணியன்.

### எம். ஜி. ஆர். என் நண்பர்

'நீங்கள் எம். ஜி. ஆரை ஆதரிப்பவர் தானே?'—நான் கேட்டேன்.

'இல்லை எம். ஜி. ஆர். அவர்கள் எனது நெருங்கிய நண்பர். அதற்காக நான் ஒரு அனைத்து இந்திய அண்ணா தி. மு. காரர் என்று அர்த்தம் இல்லை. நான் ஒரு காங்கிரஸ் காரன்! எம். ஜி. ஆர். அவர்கள் எனது நெருங்கிய நண்பர் என்பதால் அவரை கண் மூடித்தனமாக ஆதரிப்பேன் என்று பொருள் அல்ல' என்றார் மணியன்.

'உங்களின் ஆனந்த விகடன் ஈழத்து எழுத்தாளர்களை ஆதரிக்கவில்லை. உங்களின் சொந்த சஞ்சிகையிலாவது மாற்றத்தை ஏற்படுத்துவீர்களா?' என்று நான் முடிவான கேள்வியைக் கேட்டபோது,

'நிச்சயமாக ஈழத்து எழுத்தாளரின் தரமான படைப்புகளுக்கு 'இதயம் பேசுகிறது' ஆதரவளிக்கும். புதிய உறவும் ஏற்படும்' என்று கூறி முடித்துக் கொண்டார் மணியன்.

றியோ [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
விஷ்ணுவர்தன் சந்திரகலா
அலைகள்

4-ந் திகதி வரை
புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
அன்னமிட்ட கை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
ரவிச்சந்திரன் — லதா
வீட்டுக்குவந்த மருமகள்

## யாழ். ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவை சீர்கேட்டின் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது என்றே கூறவேண்டும்.

வியாழக்கிழமை இரவு யாழ். பஸ் நிலையத்தில் 6-15க்குப்பின் 8-00 மணிவரை பஸ்ஸின்றி இப்பாதை வழியாகச் செல்லும் பிரயாணிகள் கொட்டும் மழையில் ஒழுகும் தகரங்களுக்கு மத்தியில் பட்ட அவஸ்தைசொல்லுந்தரமன்று.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அசமந்தப்போக்கைக் கைவிட்டு பிரயாணிகள் இன்னல் களைவரா என கேட்கப்படுகின்றது. (உ)

## சவேரியார் திருநாள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி புனித சவேரியார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திருப்பலி பூசையுடனும் திருப்பவனியுடனும் கொண்டாடப்படுகிறது. தமிழ்மொழி ஆய்வுத் தந்தை சுவாமி ஞானப்பிரகாசரால் கட்டப்பட்ட இக்கோவிலில் அவரின் வழி வந்த அருட்திரு. ஜெபசீலன் அடிகள் முற்றிலும் தமிழ்க் கலாச்சார முறையில் திருவழிபாடுகளை நடாத்தி வருகிறார். இலங்கையிலேயே முழுவதும் தமிழ்க் கலாச்சார முறையில் இறைவழிபாடு செய்யப்படும் ஒரே ஆலயம் இதுவாகும்.

(இ—அ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்டம் நீதிமன்றம்

1. நாகலிங்கம் கைம்பெண் இராசம்மா
2. நாகலிங்கம் இராசதுரை
3. நாகலிங்கம் மகள் திலகவதி
4. நாகலிங்கம் மகள் தங்கமணி

-எல்லோரும் மல்லாகம்
—வழக்காளிகள்

இல: ஈடு/666

எதிராக

1. பிலிப்பு மரிசீலினும் பெண்
2. பிரகாசம்மாவும்

—கோட்டடி, மல்லாகம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் M B/666ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1977-ம் டிசம்பர் மாதம் 5ம் திகதி (5-12-1977) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை:

முதல்வட்டி ரூபா 1688/-ம் 19-5-1975ம் ஆண்டு 19-11-1976 வரைக்கும் ரூபா 1000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 590/62½ வழக்குச் செலவில் ஒரு பகுதிப் பணமாக கொடுபட்ட ரூபா 100/- கழிபடல்வேண்டும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை ''நீலம்பத்தை'' நிலப்பரப்பு 3¼ பரப்புகளும் எல்லைகிழக்கு ரோட்டு வடக்கு மயிலு கோவிந்தனுக்கும் மறுபேருக்குமுள்ள ஆதனங்கள் மேற்கு சின்னப்பா சிவசுப்பிரமணியத்தின் ஆதனம் தெற்கு நல்லான் கந்தையாவின் ஆதனம் இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்
வட்டுக்கோட்டை.
27-10-77

7810

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

இல. ஈடு/644

(1) செல்லத்துரை அலோசியசும்,
(2) பராயமற்ற செல்லத்துரை ஆளான இவரின் தத்துவம் பெற்ற உதவியாளர் வயிரவநாதர் செல்லத்துரை மூலம் 13, மவுறை காமல ரோட், யாழ்ப்பாணம்.

—வாதி

எதிராக

(1) பேதுருப்பிள்ளை சுயித்தாம்பிள்ளையும் பெண்
(2) மதேவேளமும் பற்றிமா வீதி, மாதகல்

—பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் 644-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியையும் அதனுள் இருக்கும் வீட்டையும் 1977-ம் ஆண்டு மார்கழி மாதம் 21-ந் திகதி (21-12-77) புதன்கிழமை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி 6000/- 8-5-75ம் ஆண்டு தொடக்கம் 12-12-75 வரைக்கும் 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கபடும்வரை சட்ட வட்டியாக வருடம் ஒன்றுக்கு 5% வட்டியும் கோட்டுச் செலவு 618 05 சதம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்கு பண்டைத்தெருப்பு கோவிற்பற்று மாதகல் இறை 'செட்டிசீமா' பரப்பு நில. இல. 1 குலி 10½யும் கல் வீடும், கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு சுப்பிரமணியம் கைம்பெண் பவளத்துக்குமுரிய காணி, வடக்கு நிக்கலாஸ் கைம்பெண் வறனோவிக்குரிய காணி மேற்கு ஒழுங்கை, தெற்கு பிலிப்பு கைம் பெண் அரியளுளுக்குரிய காணி இதடங்கலும்.

மு. விஜயராஜன்
நீதிமன்ற விற்பனை,
விலை மதிப்பாணையாளர்.

தொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
3) 1 -77

7816

மணிவாக்கு

எல்லாருக்கும் திருப்தி கொடுப்பதற்கென நடந்து கொள்வன் ஒருவருக்கும் திருப்தி கொடான்.

—சாந்திமான்

ஈழநாடு
The Eelanaadu

## வரவு-செலவும் தமிழர் கூட்டணியும்

ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தின் மீது தேசிய அரசுப்பேரவையில் நடைபெற்ற விவாதம் முடிந்து மிகப் பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடத்துக்கு வந்துள்ள அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தைக் கொண்டுவந்தாலும் வேறு எந்த மசோதாவைக் கொண்டுவந்தாலும் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறும் என்பதில் எள்ளளவு ஐயமுமில்லை.

வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் பொருளாதாரப் பிரச்னை பற்றி மட்டுமல்லாது இந்த நாட்டில் வாழும் தமிழ்மக்களின் பிரச்னைகளும் முக்கியஇடம் பெற்றிருந்தது.

தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு அரசாங்கம் தீர்வு காணும் என்று அமைச்சர்கள் சிலரும் பிரதமரும் கூறியிருந்தபோதிலும் என்னவிதத்தில் அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவிருக்கின்றதென்பதற்கான தகவல்களைப் பெறுவதற்குத் தமிழர்விடுதலைக் கூட்டணியினர் முயற்சிசெய்ததையும் விவாதத்தில் காணக்கூடியதாக இருந்தது.

என்றாலும் தமிழர்பிரச்னைகளுக்கு அரசியலமைப்பு மூலம் உரிமைகள் வழங்கித் தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதென்பதைப் பிரதமரிடமிருந்தே எதிர்க்கட்சித் தலைவர் வெளிப்படுத்தியதில் வெற்றி பெற்றிருக்கிறார் என்று சொல்லவேண்டும்.

விவாதத்தின் கடைசி நேரத்தில் நிதியமைச்சர், ''சோஷலிஸ நாடுகளில் எல்லா இன மக்களும் ஒன்றாகவே வாழ்கின்றார்கள். இதன்மூலம் பல அபிவிருத்தித் திட்டங்களை அங்கு நிறைவேற்றமுடிகின்றது'' என்று கூறியபோது எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் குறுக்கிட்டு சோஷலிஸ நாடுகளில் வாழும் சகல இன மக்களுக்கும் அவர்களது சுயநிர்ணய உரிமைகள் உட்பட சகல உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன'' என்று சொன்னார்.

இச்சமயம் இடைமறித்த பிரதமர் ''அவற்றை நான் தரமாட்டேன் என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்? புதிய அரசியலமைப்பில் இவற்றை நான் பாதுகாப்பேன்'' என்று கூறியிருக்கிறார்.

வரவுசெலவுத்திட்ட விவாதம் தமிழர் பிரச்னைகள் சம்பந்தமாகப் பிரதமர் கொண்டுள்ள நோக்கத்தை வெளிக்காட்டியிருப்பது ஒரு திருப்தி.

வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் பிரதான எதிர்க்கட்சியாக விளங்கும் தமிழர்விடுதலைக் கூட்டணியினர் தமது பங்கைச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறார்கள்?

ஆனாலும் திருஷ்டிபட்டது போன்று கடைசிநேரத்தில் கூட்டணிக்குள்ளேயே வேறுபாடு எழுந்துள்ளது நிச்சயம் கூட்டணிக்கு மகிழ்ச்சியளிக்கமுடியாது.

# தமிழர் ஜனநாயக அரங்கு

## 'வாசு' கலந்துகொள்வார்

(யாழ்ப்பாணம்)

தமிழர் ஜனநாயக அரங்கு, யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் ஆதரவின்கீழ், இன்று பிற்பகல் நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் திரு வாசுதேவ நாணயக்காரா கலந்துகொள்வார்.

கட்சிசார்பற்ற முறையில் இயங்கும் இந்த அரங்கு குறிப்பிட்ட ஒரு பகுதியில் மட்டுமல்லாமல் இலங்கை முழுவதிலும் உள்ள இடதுசாரிகளுடன் இணைந்து தேசிய அணியொன்றை உருவாக்குவதற்கான சித்தாந்த சிந்தனைக் களத்தைத் தயாரிக்கும்.

அத்துடன் தமிழ்ப்பேசும் மக்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் ஜனநாயக எழுச்சியை அங்கீகரிக்கும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஏற்பதன்மூலம் சுமுகமான உறவை வடக்கு-தெற்கு முற்போக்குச் சக்திகள் மற்றும் தொழிலாளர், விவசாயிகள் மத்தியில் வலுப்படுத்துவதிலும் தமிழர் ஜனநாயக அரங்கு செயல்படும். வடபகுதி மக்களின் கருத்துக்களை தெற்கிலும், அங்குள்ள கருத்துக்களை வடக்கிலும் உணரவைத்து தேசிய அணியை கட்டி வளர்ப்பதில் இந்த அரங்கு பாடுபடும்.

இதன் தலைவராக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலம் இருக்கிறார்.

## பொத்துவில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மீறினால் கூட்டணி மூலம் பெற்ற பேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்வேனென்றும் எழுத்து மூலம் கொடுத்த வாக்குறுதி இன்னமும் நினைவிலிருக்குமென்று கருதுகிறோம். எனவே கட்டுப்பாட்டை மீறிய நீங்கள் கொடுத்தவாக்குறுதியின்படிபேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்வீர்களென்று எதிர்பார்க்கிறோம்'' என்றும் செயலதிபர்கள் தங்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

### கொள்கையை மீறவில்லை

பொத்துவில் தொகுதி இரண்டாவது உறுப்பினரான திரு. எம். சி. கனகரத்தினம் நேற்று நிருபர்கள் மத்தியில் பேசுகையில் ''தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிப்படைக் கொள்கைகளை மீறவில்லையென்றும், நாட்டின் அபிவிருத்திக்கும் குறிப்பாகத் தமது தொகுதியின் அபிவிருத்திக்கும் இந்த வரவு-செலவுத் திட்டம் வழிவகுக்கின்றதென்றும், தொகுதி மக்கள் மத்தியில் பேசும்போதுகூட தாம் இது பற்றித் தெரிவித்ததாகவும்'' கூறினார்.

## பேரவையில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று தேசியஅரசுப்பேரவையில் விடுத்த ஒரு அறிக்கையில் கேட்டுக்கொண்டார்.

திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் அறிக்கையைத் தொடர்ந்து பதிலளித்த காணி விவசாய அமைச்சர் திரு ஈ. எல். சேனநாயகா தமக்கு இருபது வருட பார்லிமெண்ட் அனுபவமுள்ளதென்றும் யாரையும் வேண்டுமென்றே அவமதிக்கும் நோக்கம் தமக்குக் கிடையாதென்றும் தாம் கொடுத்த தகவல்களுக்கு ஆதாரமிருக்கின்றதென்றும் கூறி அதற்கான தஸ்தாவேஜுகளைச் சபையில் சமர்ப்பித்தார்.

69,000 ரூபாய் பெறுமதியென முதலில் கொடுக்கப்பட்டிருந்த சொத்தின் பெறுமதி பின்னர் 6,90,000 ரூபாயாக மாற்றப்பட்டதென்றும் அமைச்சர் கூறினார்.

''சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. அதைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ளக்கூடாது என்று குறிப்பிட்ட காணிஅமைச்சர் நிக்ஸனைவிட மோசமாக நடந்திருக்கிறீர்கள் என்று திருமதி சிறிமாவைப் பார்த்துக் கூறினார்.

### ஜே. ஆர். நீதிமன்றம் சென்றார்

உம்முடைய அமைச்சரவையிலிருந்த ஒரு கோமாளி சம்பந்தமான வழக்கொன்றில் ஆஜராவதற்குப் பிரதமராக இருந்தும் திரு. ஜே ஆர். நீதிமன்றத்துக்குச் சென்றார் என்றும் அமைச்சர் கூறினார்.

முன்னைய அரசாங்கத்தில் இருந்த அமைச்சர்கள் அவர்களின் குடும்பத்தினரின் அதிகார துஷ்பிரயோகம் பற்றி விசாரணைசெய்வதற்கு ஒரு கமிஷன் நியமிக்கப்படுமென்றும் காணிவிவசாய அமைச்சர் அறிவித்தார்.

இதன்பின்பு திருமதி பண்டாரநாயகா பேச எழுந்தபோது அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டதும் அமைச்சரின் பதிலுடன் நிறுத்தப்படவேண்டும் இது ஒரு விவாதமல்ல என்று கூறியதை நினைவூட்டிய சபாநாயகர் சபையை ஒத்திவைத்தார்.

## வாசு - வி. பி. இன்று சந்திக்கிறார்கள்

(யாழ்ப்பாணம்)

சமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. வாசுதேவ நாணயக்கார இன்று காலை திரு. வி. பொன்னம்பலத்தை அளவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடவிருக்கிறார். வரவு செலவுத் திட்டம் பற்றிய கருத்தரங்கிலும் அவர் அங்கு உரையாற்றுவார்.

## மரண அறிவித்தல்

### முருகேசு கந்தப்பு

அராலி தெற்கு ஆகாயக்குளம் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த முருகேசு கந்தப்பு காலமாகிவிட்டார். இவர் இலட்சுமிப்பிள்ளையின் கணவரும், க. தருமலிங்கம் (யாழ். ஐக்கியவியாபாரச் சங்கம்), க. மாசிலாமணி [A.C.C.D. Office திருமலை], மார்க்கண்டேயர் [வாட் 17 வைத்தியசாலை யாழ்ப்பாணம்], நாகேஷ்வரி ஆகியோரின் தந்தையும் சுந்தரலிங்கம் (யாழ். ஆஸ்பத்திரி), கமலாதேவி ஆகியோரின் மாமனும், கௌரி, சிவலிங்கம், சிவசக்தி ஆகியோரின் பேரனுமாவார். ஈமைக்கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு அராலி தெற்கு மயானத்தில் நடைபெறும். 7832

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை ஐயர்

செல்வச்சந்நிதி கோவில் பூசகரும், சட்டத்தரணியுமான பொன்னுத்துரை ஐயர் அவர்கள் காலமாகிவிட்டார். இவர் திருமதி துரைரத்தினத்தின் அன்புக் கணவரும், பாலேந்திரா ஐயர், இராஜேந்திரா (பரந்தன் ரசாயனக் கூட்டுத்தாபனம்), புவனேந்திரன் (பதில் பதிவாளர்), திருமதிகள் வசந்தாதேவி சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதாஸ் (மாஜி நகரசபை உறுப்பினர்), ஆறுமுகம் (Sri Lanka Asbestos), திருமதிகள் தங்கரத்தினம், மகமாசிதேவி, ஸ்ரீ றஞ்சினி ஆகியோரின்மாமனுமாவார். அன்னாரது ஈமக் கிரியைகள் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்குத் தொண்டமானாற்றில் நடைபெறும். 7828

## மரண அறிவித்தல்

### அரியநாயகம் இராசேந்திரம்

உரும்பராயைச் சேர்ந்த அ. இராசேந்திரம் அகால மரணமானார் (கட்டிடத் திணைக்கள மேற்பார்வையாளர், யாழ். வளாகம்). இவர் பராசக்தியின் அன்புக் கணவரும் தர்ஷனி, கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வேந்திரன் [இளைப்பாறிய உதவிக் கணக்காளர் நாயகம்], திருமதிகள் குகனேஸ்வரி சுப்பிரமணியம், மனோரஞ்சிதம் சிவராசா [ஆசிரியை யாழ். மத்திய கல்லூரி], பத்மதேவி அம்பலவாணர் ஆகியோரின் சகோதரரும், அ. சுப்பிரமணியம் [சட்டத்தரணி], ரி. சிவராசா [இளைப்பாறிய ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி], காலஞ்சென்ற அம்பலவாணர் ஆகியோரின் மைத்துனரும், குராவத்தையைச் சேர்ந்த ஐயம்பிள்ளை தம்பதிகளின் மருமகனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இளங்காட்டு மயானத்திற்கு இன்று பிற்பகல் மூன்று மணிக்கு எடுத்துச்செல்லப்படும். 7831

# நாடும் நடப்பும்

'வி. பி.' என்று இரண்டெழுத்தில் அழைக்கப்படும் வடபகுதியின் பிரபல இடதுசாரியான திரு. வி. பொன்னம்பலம் சமீபகாலமாகப் பெரும் சர்ச்சைக்குரியவராகியிருப்பது பலரும் அறிந்ததே.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் நீண்டகால உறுப்பினர்களில் வி. பி. யும் ஒருவர்.

சிறுவயதிலிருந்தே மார்க்ஸிய லெனிஷக்கொள்கையில் ஊறித் திளைத்தவர்களில் வி. பி. க்குத் தனியிடமுண்டு.

முன்னைய அரசாங்கத்தில் மாஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கம்வகித்தபோது கட்சிக் கட்டுப்பாட்டுக்குட்பட்டு நடந்ததால் வி. பி. க்குப் பல சோதனைகளும் ஏற்பட்டன.

சித்தாந்த ரீதியில் கம்யூனிஸ்ட்கட்சி பிளவுபட்டபோது இலங்கையில் மாஸ்கோ பிரிவுக் கம்யூனிஸ்ட் கட்சியிலேயே வி. பி. சேர்ந்துகொண்டார்.

மாஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் டாக்டர் விக்கிரமசிங்கா கோஷ்டி பீட்டர் கெனமன் கோஷ்டி என பிரிவு ஏற்பட்டபோதும் இந்தப் பிரிவில் எந்தப்பக்கமும் சாராமல் வி. பி. இருந்தார்.

இதனால்தானோ என்னவோ இன்று வி. பி. கட்சியில் தனித்துவிடப்பட்டிருக்கிறார் என்று கட்சிக்குள்ளேயே சிலர் சொல்கிறார்கள்.

வி. பி. யின் மீது கட்சிக் கட்டுப்பாடுகளை மீறியதாகக் குற்றம்சாட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி விரைவில் விசாரணை நடைபெறவிருப்பதாகவும் அறிகிறேன்.

தமிழர்விடுதலைக் கூட்டணியினருடன் வி. பி. நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டது; திரு அமிர்தலிங்கத்தின் தேர்தல்நியமனப்பத்திரத்தில் கைச்சாத்திட்டது முதலான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதுடன் பத்திரிகைகளுக்குக் கட்சியின் உள் இரகசியங்களை வெளியிட்டதாகவும் ஒரு குற்றச்சாட்டு.

இப்பொழுதும் கட்சியின் உள்விஷயங்கள் வெளிவராமல் இருக்கின்றனவா?

வி. பி. மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றி சமீபத்தில் ஒரு தோழர் விமரிசிக்கையில்;

தமிழர்விடுதலைக் கூட்டணியின் தேர்தல்விஞ்ஞாபனத்தில் சோசலிசக்கொள்கை மணத்ததும் இன்றைய எதிர்க்கட்சித்தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதுகெலும்பு என்று வர்ணிக்கப்படுபவருமான திரு. அ. அமிர்தலிங்கம் சமீபத்தில் ''சோஷலிஸமே நமது பாதை'' என்று கூறிவருவதும் வி. பி. யின் பெரும் சாதனை என்று சொன்னால் என்ன?''

என்று அவர் கூறியது சிந்திக்கவேண்டிய விஷயம்தான்!

0 0 0

லங்கா சமசமாஜக்கட்சியின் வாலிபமுன்னணித் தலைவர் திரு வாசுதேவநாணயக்கார நேற்றுக் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் இல்லத்தில் தமிழர்விடுதலைக் கூட்டணிப்பிரமுகர்கள் சிலரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

விரைவில் யாழ்ப்பாணம் வரவிருக்கும் திரு. ரோகண விஜயவீராவும் தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சிலரையும் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நடப்பதெல்லாம் நன்மைக்கே.

ஊர்சுற்றி

## ஈழநாடு ஏஜன்ட்

சித்தன்கேணிப் பகுதிக்கு திரு. நல்லையா இராசலிங்கம் என்பவர் எமது பத்திரிகை விற்பனை ஏஜன்டாக நியமிக்கப்பட்டுள்ளார். வாசக நேயர்கள் உங்கள் தேவைக்குத் தொடர்புகொள்ளவும்.

திரு. ந. இராசலிங்கம்
''லிங்கம்ஸ்''
சித்தங்கேணிச் சந்தி
சித்தங்கேணி. 7826

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as News paper in Sri lanka.